# இஸ்லாம்

## தரம் 1

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

*முதலாம் பதிப்பு - 2015*
*இரண்டாம் பதிப்பு - 2016*
*மூன்றாம் பதிப்பு - 2017*
*நான்காம் பதிப்பு - 2018*
*ஐந்தாம் பதிப்பு - 2019*

*எல்லா உரிமையும் அரசினர்க்கே.*

ISBN 978-955-25-0029-9

கல்வி வெளியீட்டு திணைக்களத்தால்
நுகேகொட, கங்கொடவில, உடஹமுள்ள புகையிரத வீதி, இல 44 என்ற
இடத்தில் அமைந்துள்ள நியோ கிராபிக் (தனியார்) நிறுவனத்தால்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

நீங்கள் பிறந்திருப்பது இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படக்கூடிய ஒரு நாட்டிலாகும். உங்கள் நாட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது ஒரு சிறிய நாடாகத் தென்பட்டாலும் அதன் பெறுமதி விலைமதிப்பற்றதாகும். இவ்வாறான பெருமிதமிக்கதொரு மண்ணில் பிறந்துள்ள நீங்கள் அனைவரும் உண்மையிலேயே அதிஷ்டசாலிகள். மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் நன்கு கல்வி கற்று நற்குணமும் அறிவும் சக்தியும்மிக்க பிரசைகளாகி, எதிர்கால உலகை ஒளியூட்டுவீர்கள் என்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்பை அடைவதற்குக் கல்விக்கான சகல வசதிகளையும் இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே இந்நூலையும் அது உங்களுக்கு வழங்குகின்றது.

ஆரம்பப் பிரிவுப் பாடத்திட்டத்திற்கேற்ப இதுவரைக்கும் தரம் 1, 2, 3, 4 இற்கான புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு தரம் 5 இற்கான புதிய பாடநூல்களின் அறிமுகத்துடன் ஆரம்பப் பாடத்திட்ட மறுசீரமைப்பு எனும் இக்கட்டம் நிறைவு பெறுகின்றது. தரம் 1 முதல் தரம் 5 வரை கற்கும் ஆரம்பப் பிரிவு மாணவருக்காக அரசு ஏறக்குறைய 30 வகையான பாடநூல்களைத் தயாரித்து வழங்குகின்றது. இவ்விலைமதிப்பற்ற வளத்தினைப் பயன்படுத்தி வாழ்க்கையை வளமானதாக ஆக்கிக் கொள்வது உங்கள் அனைவரினதும் கடமையாகும்.

இப்பாடநூலை உங்கள் கைகளில் தவழச்செய்வதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

**டபிள்யூ.எம்.ஜயந்த விக்கிரமநாயக்க**
**கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்**

**டபிள்யூ.ஏ. நிர்மலா பியசீலி**
**கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**
(அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் எம்.ரீ. அப்துர் ரஹ்மான்**
**உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**எழுத்தாளர் குழு**

**ஜனாப் எஸ்.எம்.ஆர். சூதீன்**
**ஆசிரிய கல்வியியலாளர்,**
ஸாஹிரா கல்லூரி, கொழும்பு 10.

**எம்.ஏ.எம். நஸீரா**
**சிரேஷ்ட ஆசிரியயை** (ஆரம்பப் பிரிவு),
பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
கொழும்பு 12.

**பதிப்பாசிரியர் குழு**

**ஜனாப் இஸட். தாஜுதீன் (இ.க.நி.சே)**
**பணிப்பாளர்,**
முஸ்லிம் பாடசாலை அபிவிருத்திப் பிரிவு,
கல்வி அமைச்சு.

**ஜனாப் எம்.எச்.எம். நாளிர்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
பாதிஹ் இஸ்லாமிய நிறுவனம், திஹாரிய.
**வளவாளர்** - தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

**அட்டைப்படம், தளக்கோலம், கணினி வடிவமைப்பு**

**எச்.எப். ரிஸ்னா**
**கணினி வடிவமைப்பாளர்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**சித்திரம்**

**ஜனாப் எம்.ஜே.எம். மன்ஸூர்**
**பிரதி அதிபர்,**
வித்யாலோக மகா வித்தியாலயம், பலாங்கொட.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் | 1 |
| 2. | அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிப்போம் | 2 |
| 3. | அல்லாஹ் பாதுகாவலன் | 4 |
| 4. | அல்ஹம்து லில்லாஹ் | 5 |
| 5. | லாஇலாஹ இல்லல்லாஹ் | 7 |
| 6. | அல்லாஹ்வை விசுவாசிப்போம் | 8 |
| 7. | கலிமா தையிபா | 9 |
| 8. | சுத்தமாக இருப்போம் | 10 |
| 9. | வீடும் சூழலும் | 14 |
| 10. | வகுப்பறையை அழகாக வைப்போம் | 15 |
| 11. | உணவு உண்போம் | 17 |
| 12. | உடை அணிவோம் | 20 |
| 13. | நல்ல பிள்ளையாக வாழ்வோம் | 23 |
| 14. | பெற்றோரை கௌரவிப்போம் | 25 |
| 15. | ஆசிரியரை மதிப்போம் | 26 |
| 16. | சேர்ந்து வாழ்வோம் | 27 |
| 17. | எங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் | 28 |
| 18. | ஸலவாத்துச் சொல்வோம் | 31 |
| 19. | அல்குர்ஆனை ஓதுவோம் | 32 |
| 20. | ஸூரா அல் பாத்திஹா | 34 |
| 21. | மஸ்ஜித் | 35 |
| 22. | இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி | 39 |

# 1
# பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## *பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*

‘அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன்’

இதனை நாம் கூறுவதால் அல்லாஹ்வின் அருளும் அன்பும் எமக்குக் கிடைக்கும்.

# 2
# அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிப்போம்



ஓதும் முன்பும்
பிஸ்மில்லாஹ்
தொடங்கும் முன்பும்
பிஸ்மில்லாஹ்



உண்ணும் முன்பும்
பிஸ்மில்லாஹ்
குடிக்கும் முன்பும்
பிஸ்மில்லாஹ்




படிக்கும் முன்பும்
பிஸ்மில்லாஹ்
எழுதும் முன்பும்
பிஸ்மில்லாஹ்



உடுக்கும் முன்பும்
பிஸ்மில்லாஹ்
உறங்கும் முன்பும்
பிஸ்மில்லாஹ்

எல்லா நல்ல செயல்களையும்
இதனைக்கொண்டு துவங்கிடுவோம்
இதன் மூலம் அல்லாஹ்வின்
அன்பைப் பெற்றிடுவோம்.

# 3
# அல்லாஹ் பாதுகாவலன்

أَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

**அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்**

அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவோம்.







# 4
# அல்ஹம்து லில்லாஹ்

اَلْحَمْدُ لِلّٰهِ



**அல்ஹம்து லில்லாஹ்**

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே

நன்றி செலுத்த
அல்ஹம்து லில்லாஹ்
நாங்கள் சொல்வது
அல்ஹம்து லில்லாஹ்

மகிழ்ச்சியில் வருவது
அல்ஹம்து லில்லாஹ்
பாராட்டிச் சொல்வது
அல்ஹம்து லில்லாஹ்

பரிசுகள் கிடைத்தால்
அல்ஹம்து லில்லாஹ்
கஷ்டங்கள் அகன்றால்
அல்ஹம்து லில்லாஹ்

தேடியது கிடைத்தால்
அல்ஹம்து லில்லாஹ்
தேவைகள் முடிந்தால்
அல்ஹம்து லில்லாஹ்

# 5
# லாஇலாஹ இல்லல்லாஹ்

لَاإِلٰهَ إِلَّااللّٰهُ



**லாஇலாஹ இல்லல்லாஹ்**
திக்ரினை மொழிவோம்

**லாஇலாஹ இல்லல்லாஹ்**
வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனே.

**லாஇலாஹ இல்லல்லாஹ்**
நாம் தொழுவதற்குத் தகுதியானவன்
அல்லாஹ் மட்டுமே.

# 6
# அல்லாஹ்வை விசுவாசிப்போம்

அல்லாஹ் ஒருவனே.

அவன் அன்பானவன்.

இரக்கம் காட்டுபவன்.

அனைத்தையும் படைத்தவன்.

அனைத்தையும் பரிபாலிப்பவன்.



அல்லாஹ்வே
எல்லாம் தருபவன்.

அல்லாஹ்வைத் தினமும்
தொழுதிடுவோம்.

அவனிடமே
துஆ கேட்டிடுவோம்.

# 7
# கலிமா தையிபா

لَاإِلٰهَ إِلَّااللّٰهُ

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

**லாஇலாஹ இல்லல்லாஹு**

**முஹம்மதுர் ரஸூலுல்லாஹி**

# 8
# சுத்தமாக இருப்போம் - I



பல் துலக்குவோம்.



கை கால் முகம்
கழுவி சுத்தமாவோம்.



குளித்து உடல்
முழுவதையும்
சுத்தம் செய்வோம்.



இலவச பாடநூல் விநியோகத்திற்காக

தலைமுடி சீவுவோம்.



நகங்களை வெட்டுவோம்.



சுத்தமாக இருப்பவர்களையே
அல்லாஹ் விரும்புகின்றான்.

# சுத்தமாக இருப்போம் - II

கழிப்பறை செல்லும்போது
பாதணி அணிவோம்.




இலவச பாடநூல் விநியோகத்திற்காக

கழிப்பறையை நீரூற்றி,
சுத்தமாக வைத்திருப்போம்.

அங்கு செல்லு முன்பும்
சென்று வந்த பின்பும் அதனைச்
சுத்தம்செய்வது நல்ல பழக்கமாகும்.

மலசலம் கழித்தபின்
சவர்க்காரம் பூசிக்
கைகளைக் கழுவிக் கொள்வோம்.

மற்றவர்களும்
செல்லக்கூடிய விதத்தில்
கழிப்பறையைச் சுத்தமாக வைப்போம்.

# 9
# வீடும் சூழலும்



நாம் வீட்டைச் சுத்தமாகவும் அழகாகவும் வைப்போம்.

வீட்டை சுத்தமாக வைப்பதற்கு உதவுவோம்.

நாம் பயன்படுத்தும் பொருள்களை ஒழுங்காகவும், சுத்தமாகவும், அழகாகவும் வைப்போம்.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

# 10
# வகுப்பறையை அழகாக வைப்போம்



எங்கள் வகுப்பறையைச் சுத்தமாக வைப்போம்.

வகுப்பிலுள்ள பொருள்களை உரிய இடத்தில் வைப்போம்.

குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் இடுவோம்.

தளபாடங்களையும் உபகரணங்களையும் சுத்தமாகவும் அழகாகவும் வைப்போம்.

எமது சூழலையும் சுத்தமாக வைக்க ஒத்துழைப்போம்.



அதன் அழகில் மகிழ்வடைவோம்.

# 11
# உணவு உண்போம்

உணவு உண்ணு முன்பு கைகளைக் கழுவுவோம்.

உண்ட பின்பும் கைகளைக் கழுவுவோம்.

கழுவும்போது சவர்க்காரம் பூசுவோம்.





உட்கார்ந்து உண்போம்.

உண்ணுமுன்பு **பிஸ்மில்** கூறுவோம்.



இலவச பாடநூல் விநியோகத்திற்காக



நீரை மிடர் மிடராகக் குடிப்போம்.



உண்ட பின்பும் நீர் குடித்த பின்பும் **அல்ஹம்து லில்லாஹ்** என்று கூறி அல்லாஹ்வைப் புகழுவோம்.

# 12
# உடை அணிவோம்

நாங்கள் விருப்புடன் உடுத்திடுவோம்.

அணியும் முன்பு உதறிடுவோம்



வலதில் இருந்து தொடங்கிடுவோம்.



அணிந்த உடையைக் களைவதிலே
இடதை முதலில் தொடங்கிடுவோம்.



களைந்த உடையை கழுவிடுவோம்
கழுவிக் கவனமாய் வைத்திடுவோம்

அணியும் களையும் வேளைகளில் உரிய
துஆவை ஓதிடுவோம்.

# 13
# நல்ல பிள்ளையாக வாழ்வோம்

அதிகாலையில் எழுந்திடுவோம்
காலைக்கடன்களை முடித்திடுவோம்.

அல்குர்ஆனைத் தினம் ஓதிடுவோம்
பிறர் ஓதுவதைக் கேட்டிடுவோம்.





மூத்தோரை நாம் மதித்திடுவோம்
அயலார்க்கும் உதவிடுவோம்.

நல்லன செய்ய விரும்பிடுவோம்
சுவன வாழ்வைத் தேடிடுவோம்.

தீமை செய்வதை வெறுத்திடுவோம்
நரக வாழ்வைத் தடுத்திடுவோம்.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

# 14
# பெற்றோரை கௌரவிப்போம்



பெற்றோரை கண்ணியப்படுத்துவோம்.

அவர்கள் சொற்படி நடப்போம்.

உறவினர்களுடன் சேர்ந்து இருப்போம்.

அவர்களுக்கும் உதவி செய்வோம்.

# 15
# ஆசிரியரை மதிப்போம்




ஆசிரியர்களிடம் அன்புடன் நடப்போம். அவர்களை நாம் கௌரவிப்போம்.

அவர்களின் வழிகாட்டல்களை ஏற்று நடப்போம்.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

# 16
# சேர்ந்து வாழ்வோம்

எல்லோருடனும் சேர்ந்து வாழ்வோம்.

ஒற்றுமையாக இருப்போம்.

பிறருடன் பகிர்ந்து உண்போம்.

நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுவோம்.



# 17
# எங்கள் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் - I

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்.

அவர்கள் மக்காவில் பிறந்தார்கள்.

அவர்களின் தாயார் பெயர் ஆமினா.

தந்தையின் பெயர் அப்துல்லாஹ்.




இலவச பாடநூல் விநியோகத்திற்காக

# எங்கள் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் - II

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறு வயது முதல் உண்மையே பேசினார்கள்.

அவர்களை எல்லோரும் 'அஸ்ஸாதிக்' என அழைத்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லோரும் நம்பும் விதத்தில் நம்பிக்கையாக நடந்தார்கள்.

அவர்களை எல்லோரும் 'அல்அமீன்' என்று அழைத்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவில் வபாத்தானார்கள்.



நாமும் எப்போதும் உண்மையே பேசுவோம்.

நம்பிக்கையாக நடப்போம்.

## 18
## ஸலவாத்துச் சொல்வோம்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெயரைக் கேட்டால் அவர் மீது ஸலவாத்துச் சொல்வோம்.

صَلَّى اللهُ عَلٰى مُحَمَّدٍ

صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

**ஸல்லல்லாஹு அலா முஹம்மத்**

**ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்**

# 19
# அல்குர்ஆனை ஓதுவோம்



அல்குர்ஆன் அல்லாஹ்வின் கலாமாகும்.

அதுவே எங்கள் வேத நூல் ஆகும்.

அது எங்களுக்கு வழிகாட்டி ஆகும்.

அதனை அல்லாஹ் நபி ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம் அவர்களுக்கு
இறக்கி வைத்தான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதனைக் கற்பித்தார்கள்.

அல்குர்ஆனைத் தினமும் ஓதி வருவோம்.



அதனை ஓதக் கேட்போம்.



# 20
# ஸூரா அல் பாத்திஹா

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝١ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٢
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٣ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٤
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٥ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ
عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

ஸூரா அல் பாத்திஹாவைத்
தினமும் ஓதி வருவோம்.

அதனால் அல்லாஹ்வின் ரஹ்மத்தும்,
பரகத்தும் கிடைக்கும்.

# 21
# மஸ்ஜித்



இது ஒரு மஸ்ஜித்.

இது அல்லாஹ்வின் மாளிகை.

இது கண்ணியத்துக்குரிய இடமாகும்.

இங்கு அல்லாஹ்வைத் தொழுவோம்.

இதை எப்போதும் சுத்தமாக வைத்திருப்போம்.

இங்கு அமைதியைப் பேணுவோம்.

சுத்தமான நிலையிலேயே உள்ளே செல்வோம்.

இமாம் மஸ்ஜிதில் தொழுகை நடத்துவார்.

இமாம் தொழுகை நடத்தும் இடம் மிஹ்ராப் ஆகும்.

மஸ்ஜிதில் போதனைகள் நடக்கும்.

போதனை நடத்தும் இடம் மிம்பர் ஆகும்.

சுத்தமாக உள் நுழைவதற்கு வுழூ செய்ய வேண்டும். வுழூ செய்வதற்காக ஹவ்ழ் அமைக்கப்பட்டுள்ளது.



மிஹ்ராப் மிம்பர்

மஸ்ஜிதில் உயர்ந்த மினாரா உண்டு.



நாம் தினமும் மஸ்ஜிதுக்குச் சென்று தொழுவோம்.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

# 22
# இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி



இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் உலகம் போற்றும் ஓர் அறிஞர் ஆவார். அவர் பாரசீகத்தில் பிறந்தார். கல்வி கற்பதற்காக அவர் பக்தாத் சென்றார்.

பக்தாதில் இருந்து வரும்போது ஒருநாள், வழியில் திருடர்கள் அவரை வழிமறித்தனர்.

அவரது பொருட்களை அபகரித்தனர்.

இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கவலை அடைந்தார். தனது புத்தகங்களைத் திருப்பித் தருமாறு கேட்டார்.

“நீ படித்தவற்றைப் புத்தகத்தில்தானா வைத்திருக்கிறாய்?” என திருடர்கள் அவரிடம் கேட்டனர்.

இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சிந்திக்கலானார். படித்தவற்றைப் புத்தகத்தில் மட்டுமே வைக்காது நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என உணர்ந்தார். அவற்றைச் செயல்படுத்தியும் வந்தார்.

இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைப் போன்று கற்பவற்றை மனதில் இருத்திக் கொள்வோம். நாமும் வாழ்வில் அவற்றைக் கடைப் பிடிப்போம்.